**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**SESSIONS CASE NO. 112/2018**

**Deposition of Witness for : PW.1**

**Name** : திருமதி. மணிமேகலை
**Husband Name** : செல்வம்
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05-10-2020.**

முதல் விசாரணை.

நான் தற்போது நாரியமங்கலம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். 1ம் எதிரி எனது கணவரின் அண்ணன் ஆவார். 2ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி. நில விஷயமாக எதிரிகளுக்கும் எங்களுக்கும் சண்டை வரும் ஆதலால் 1ம் எதிரி என்றைக்காவது எனது கணவரை சாகடித்து விடுவேன் என்று கூறி வந்தார். 27.05.2016ந் தேதி இரவு 7 மணி அளவில் என் வீட்டின் எதிரே எதிரிகளின் மகன் பார்த்திபன் தடியால் என் கணவரின் வலது கண்ணத்தில் அடித்தார். 1ம் எதிரி பொன்னுசாமி கருங்கல்லால் என் கணவரின் தலைக்கு பின்னால் குத்தினார். நான் தடுக்க போனேன். 2ம் எதிரி என்னை பிடித்துக் கொண்டார். அதன் பிறகு என் கணவரை பல அடிகள் அடித்தார்கள். அதன் பிறகு 108 ஆம்புலன்சில் என் கணவரை திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் அதன் பிறகு மேல் சிகிச்சைக்காகாக வேலூர் சி.எம்.சி அழைத்து சென்றோம். அங்கு ஐ.சி.யுல் இடம் இல்லை என்பதால் வேலூர் நாராயணி மருத்துவமனையில் சேர்க்க கேட்ட போது அவர்கள் சரியான கருவி இல்லை என்று கூறி அனுப்பிவிட்டார்கள். அதன் பிறகு நாங்கள் சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் 28.05.2016ந் தேதி சேர்த்தோம். அங்கு என் அண்ணன் மாசிலாமணியை என் கணவரை பார்க்க செல்லிவிட்டு மற்றொரு அண்ணன் அருள் சுந்தர பாண்டியனை அழைத்து சென்று கீழ் பென்னாத்தூர் காவல் நிலையம் வந்து 28.05.2016 புகார் கொடுத்தேன். எதிரிகள்

தாக்கிய கல் மற்றும் தடியை என்னால் அடையாளம் காட்ட முடியும் காட்டப்படும். தடி சா.பொ. 1, கல் சா.பொ.2. நான் கீழ்பென்னாத்தூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் அ.சா.ஆ. 1. என் கணவர் 29.05.2016ந் தேதி ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் பகல் 1 மணிக்கு இறந்து விட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். 1ம் எதிரி மற்றும் அவரது மகன் அடித்ததால் தான் என் கணவர் இறந்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.. இல்லை</u>

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.